**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

**11.11.2025**

OS. No.237/2009

பக்கம் – 3

PW1 – சேஷாத்திரி

**1 மற்றும் 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய பூர்வீக சொத்து மூன்று ஏக்கர் இரண்டு செண்ட் இடமாகும். இந்த விஸ்தீரனத்தை தவிர வேறு எந்த சொத்தும் எங்களுக்கு பூர்வீகமாக இல்லை என்றால் காட்ராம்பாக்கம் கிராமத்தில் இல்லை. கொங்கணாஞ்சேரி கிராமத்தில் 16 அடி அகலம் 205 அடி நீளம் கொண்ட ஒரு இடம் எனக்கும் என்னுடைய சித்தப்பாவுக்கும் பாத்தியப்பட்டதாகும். என்னுடைய சித்தப்பாவின் பெயர் ராஜு பிள்ளையாகும். இந்த வழக்கில் அவர் ஒரு தரப்பினர் அல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி எனக்கு 11 செண்ட் இடமும் எனது அண்ணனுக்கு 1 ஏக்கர் 11 செண்ட் என்னுடைய தகப்பனாருக்கு 2 ஏக்கர் 13 செண்ட் இடமும் ஒதுக்கப்பட்டது. எந்த சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது குறித்த விபரம் எனக்கு ஆவணத்தின் அடிப்படையில் தான் தெரியும் புல எண் எனக்கு தற்போது சரியாக நினைவில்லை. எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களை நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதனால்தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். 563/1A2 என்ற புல எண்ணில் 16 செண்ட் இடம் எனக்கு பத்தியப்பட்டதாகும். நாங்கள் கிரயம் செய்து கொடுத்த சொத்துக்களுக்கு நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. கிரயம் பெற்ற நபர்கள் யார் யார் கையெழுத்து கேட்டார்களோ அவர்களுக்கு மட்டும் நாங்கள் செய்து கொடுத்துள்ளோம். 563/1A2 புல எண்ணில் உள்ள 16 செண்ட் இடம் எனக்கு ஒதுக்கப்பட்டதற்கு வா.சா.ஆ. 4 மற்றும் 5

கூர்ச்சீட்டு தான் ஆதாரமாகும். வா.சா.ஆ. 4 மற்றும் 5 கூர்ச்சீட்டுகளில் புல எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேலும் சொத்துக்களுக்கு ஜக்பந்திகளும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தின் அடிப்படையில் என்னுடைய தந்தைக்கு ஒரு ஏக்கர் 96 செய்த இடம் மட்டும் தான் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தின் அடிப்படையில் அதில் கண்டுள்ள சொத்தானது தான் தாவா சொத்து என்பதனை காட்டவும் எந்த ஒரு ஆவணத்தையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா இரண்டாவது பட்டியல் சொத்து வீட்டுமனைக்குரியது என்னுடைய தந்தையின் பெயரில் உள்ளது. 15.09.1991 அன்று என்னுடைய தந்தை காலமானார். இரண்டாவது ஐட்ட சொத்து கிராம நத்தம் சார்ந்த சொத்து என்றால் சரிதான். நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் இரண்டாம் பிரதிவாதி குப்பை பிள்ளையின் பெயருக்கு தான் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய தந்தையின் இறப்பிற்கு பின்னர் தான் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பட்டா இரண்டாம் பிரதிவாதியின் பெயருக்கு வழங்கப்பட்டது என்றும் அதனால் அது என்னுடைய தந்தையின் பெயருக்கு வழங்கப்பட்டதாக நான் வழக்கிற்காக வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாள் சரியல்ல. புல எண் 563/1A2ல் பிரதிவாதி ஜெகநாதன் வீடு கட்டி அதனை அனுபவித்து வருகின்றார் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு அவரது பெயரில் தான் சொத்து வரி செலுத்தி வருகின்றார் என்றால் சரிதான். மேலும் மின் இணைப்பும் அவரது பெயரில் பெற்றுள்ளார் என்றால் சரிதான். புல எண் 563/1A2ல் உள்ள 16 சென்ட் இடத்திற்காக வேண்டி தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். புல எண் 563/1A2ல்

உள்ள சொத்தினை இந்த வழக்கில் ஒரு வழக்கு சொத்தாக நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல அதற்காக வேண்டி தான் இந்த வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன். இரண்டாம் பிரதிவாதி குப்பு பிள்ளைக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அவரிடம் உள்ளது என்றால் பகுதியை விற்று விட்டார் மீதியை அவர் வசம் வைத்துள்ளார். குப்பு பிள்ளையும் சொத்துக்களை கிரையம் செய்து போது நான் அவருடன் சேர்ந்து கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் நான் கிரையம் செய்து கொடுத்த சொத்துக்களுக்கும் குப்பு பிள்ளை என்னுடன் சேர்ந்து கையெழுத்து செய்து கொடுத்துள்ளார். வா.சா.ஆ.4 மற்றும் 5 கூர்ச் சீட்டுக்களின் படி நாங்கள் யாரும் நடந்து கொள்ளாத காரணத்தினால் தான் அதில் கண்டுள்ள சொத்துக்களை கிரையம் செய்து கொடுக்கும் பொழுது அனைத்து நபர்களும் சேர்ந்து கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த இரண்டு கூர் சீட்டுகள் செல்லத்தக்கதில்லை என்றும் அதன் அடிப்படையில் எனக்கு இந்த வழக்கில் எந்த ஒரு பரிகாரமும் கிடைக்கத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. இந்த இரண்டு கூர்ச்சீட்டுக்களின் அடிப்படையில் தான் என்னுடைய இரண்டு குழந்தைகளின் பெயரில் நான் செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மென்ட் ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்ல. அந்த செட்டில்மென்ட் ஆவணங்கள் 563/1A2ல் உள்ள 16 சென்ட் இடத்திற்கானது தான். 563/1A2ல் உள்ள 16 செண்ட் இடம் சாலை ஓரத்தில் அமையப் பெற்றுள்ளது என்றும் அது மிகவும் அதிகப்படியான மதிப்பு மிக்கது என்றும் நான் தவறாக அதனை என் வசத்தில் எடுத்து செட்டில்மென்ட் ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால்

சரியல்ல. தாவா இரண்டாவது ஐட்டம் சொத்து எனக்கு எவ்விதத்திலும் உரிமைப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. 1972 ஆம் ஆண்டிலிருந்து நான் சென்னையில் வசித்து வருகின்றேன். இரண்டாம் பிரதிவாதி குப்பு பிள்ளை நிலங்களை பராமரித்து வந்தார் என்றால் சரிதான் அவர் என்னுடைய பெற்றோரை கவனித்து வந்த காரணத்தினால் அவர் அதில் பயிர் வைத்து பராமரித்து வந்தார். தவறான சொத்து விவரத்தை இவ்வழக்கில் சொல்லி உள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/- K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்